1982 பிப்ரவரி 11]

மாயூரத்தில் காவிரியாற்றின் குறுக்கே உள்ள பழைய பாலம்.

***வினா எண் 145—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரத்தில் காவிரியாற்றின் குறுக்கே உள்ள பழைய பாலத்தை விரிவுப்படுத்திப் புதுப்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, நீண்ட நெடுங்காலமாகவே அந்தப் பகுதி மக்கள் அந்தப் பாலத்தை பாதுகாக்க வேண்டும் என்றும் அகலப்படுத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்கள். அன்றைய உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு காளிமுத்து அவர்கள் மாயூரத்திற்கு வருகை தந்த போது மாயூரத்திற்கு எந்த வரம் வேண்டுமானாலும் தருகிறோம் என்று சொல்லிவிட்டு அந்த வரத்தைக்கூட தராமல் இருக்கும் நிலைமையை மாற்றுவதற்காகவாவது நமது மாண்புமிகு இன்றைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே வரம் கேட்டால் எப்பொழுது வேண்டுமானாலும் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பது பாலம். ஆகவே பாலத்தைக் கட்டுவது மிகவும் சிரமமாக இருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே மாயூரம் நகராட்சியைப் பொறுத்தவரையில் டெஃப்சிட் முனிசிபாலிடியாக இருக்கிற காரணத்தாலும் பன்னெடுங்காலமாக அந்தப் பாலத்தை அகலப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை இருக்கிற காரணத்தினாலும் நீண்ட நெடுங் காலத்திற்கு முன்னாலே குறுகிய அளவு உள்ள போக்குவரத்திற்காக அமைக்கப்பட்ட பாலம் என்ற முறையிலும் இப்பொழுது ஏற்பட்டிருக்கக்கூடிய அதிகப் போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காகவும் அரசே முன் நின்று அந்தப் பாலத்தைக் கட்டி முடிக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல மாயூரம் பகுதி பற்றாக்குறை முனிசிபாலிட்டியாகத்தான் இருக்கிறது. இந்தப் பாலத்தைக் கட்ட சுமார் 7 லட்சம் ரூபாய் தேவை என்ற வகையில் மதிப்பீடு செய்யப் பட்டிருக்கிறது. அதில் 25 சதவீதம் நகராட்சியின் பங்குத் தொகையாகக் கொடுக்க வேண்டும்,

நகராட்சியில் பணம் இல்லை என்ற காரணத்தினால் தான் அந்தப் பணி நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் அங்கே நிதி நிலைமை போன்றவைகள் சீராக இருக்கிற நேரத்தில் சண்டிப் பாக பாலம் வேலைகள் எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. இரே. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாயூரத்தில் காவிரி ஆற்றின் குறுக்கே இருக்கிற அந்தப் பாலம் அகலக் குறைவாக இருக்கிற காரணத் தாலும் பழைய பாலமாக இருக்கிற காரணத்தாலும் அதிலே போக்குவரத்து இடைஞ்சல் ஏற்படுவதும், அடிக்கடி அந்த இடத்திலே விபத்துக்கள் அதிகமாக ஏற்படுவதும் சகஜமாக இருப்பதாக சொல்லப்படுகிறது. விபத்துக்களைத் தடுப்பதற்காகவும், பழைய பாலம் இடிந்து விழுந்து போக்குவரத்து பாதிக்கப் படாமல் இருப்பதற்கும், உடனடியாக அந்தப் பாலத்தை அகலப்படுத்திக் கொடுப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இந்த ஆண்டில் அந்தப் பாலத்தை எடுத்துக் கொள்வதாக இல்லை. வருகிற ஆண்டுகளில் பரிசீலிக்கலாம்.

கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம்.

***வினா எண். 146—திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம்** : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ). கிராமப்புற வேலை வாய்ப்பு தேசிய திட்டத்தின் கீழ் தமிழகத்திற்கு மத்திய அரசு 1980–1981-ம் ஆண்டிற்கு எவ்வளவு பணம் ஒதுக்கியுள்ளது ?

(ஆ). எந்த அடிப்படையில் ஒதுக்கப்பட்டுள்ளது ?

(இ). இது பற்றிய முழு விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ). 1980–1981-ம் ஆண்டிற்கு மத்திய அரசு கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு ரூ. 1,059.508 லட்சங்கள் ஒதுக்கீடு செய்தது.

(ஆ) மற்றும் (இ). 75 விழுக்காடு இம்மாநிலத்தில் உள்ள விவசாயத் தொழிலாளர்கள், மற்றும் சொற்ப நில விவசாயிகள் ஆகியோர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலும் 25 சதவீதம் விழுக்காடு வறுமை நிலையில் உள்ளவர்களுக்கு என்ற அடிப்படையிலும் ஒதுக்கீடு செய்தது.